2400

உ

முருகன்றுணை.

திருப்போரூர் முருகக்கடவுள் பதிகம்.

இஃது

சென்னை-சண்முகஞானபுரம்

ம-ா-ா-ஸ்ரீ

சிவநேசர்

சுப்பராயபிள்ளை யவர்கள்

கேட்டுக்கொண்டபடி

ம-ா-ா-ஸ்ரீ

ஆரணி இராமலிங்க முதலியார்

குமாரர்

இயற்றமிழ் வித்துவான்

அண்ணுமலை முதலியா ரவர்களால்

இயற்றி

இரங்கோன் பங்கால் பாங்கியில்

அசிஸ்டான்டு காஷியரும்,

இந்நூ லாசிரியர் மாணுக்கரும்,

சிவநேசருழியருமாகிய

ம-ா-ா-ஸ்ரீ

ப. வீ. சுந்தரமுதலியா ரவர்களால்

இரங்கோன்:

டிவாஸ் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்

பட்டது.

1890.

உ

முருகன்றுணை.

முகவுரை.

கடல்சூழ்ந்த வையகத்திற் கல்வியறி வொழுக்கங்களாற் சிறந்து விளங்குங் கவிஞர்க ளனைவர்க்கும் வந்தனம்.

சென்ற 1889-ஆம் அக்டோபர்மீ 27உ இரங்கோனைச்சார்ந்த கன்டோன் மென்டுக் கடுத்த விசாலம் பொருந்திய அசெம்பிலி ஹாலில் அடியேன் இப்பதிகத்தை யரங்கேற்றிய காலத்தில் அங்கெழுந் தருளியிருந்த வித்வஜன சங்கத்தி லொருவரும், இவ்வூர் ஹானரேரி மாஜிஸ்டிரேட்டும், இத்துறைமுகத்துக் கப்பல் துவிபாஷியரும், பெரிய வியாபாரியுமாகிய ஸ்ரீமான் பே. மா. மதுரைப் பிள்ளை யவர்கள் ஆனந்தித்து அச்சபையிலுள்ள வித்துவான்களி னபிப்பிராயப்படிக்கு அடியேனுக்கு இயற்றமிழ் வித்துவான் என்னுஞ் சிறப்புப் பெயரை யளித்தனர். அத்தருணத்தில் அங்கிருந்த கனவான்கள் “இங்ஙனமளித்த பெயரைச் சென்னையிலுள்ள வித்வான்களுக் கறிவித்து அவரவர்கள் கருத்திற் கிசையக் களிப்புற்றளிக்குஞ் சிறப்புக் கவிகளுடன் இப்பதிகத்தையும் அச்சிற்பதிப்பித்துப் பிரசித்தப்படுத்தின் மிகவு முசிதமா யிருக்கும்” என்றறிவித்தமையால் அவ்வாறே கல்வியில் வல்லவரா யிருக்கிற கனவான்களுக் கறிவித்து அவரவர்கள் அன்பிற்கிசைய வெழுதியனுப்பிய செய்யுட்களையு மிப்பதிகத்துடன் பதிப்பிக்க வேண்டிய தத்தியாவசியக மாயிற்று; ஆகவே யிச்சிறிய நூலிற்குப் பாயிரம் விரிவாயிற்று.

இங்ஙனம்,

சிவநேசரூழியன்,

ஆரணி அண்ணாமலை.

உ

முருகன்றுணை.

இஃது
இரங்கோன்
பெங்கால் பாங்கியில்
அசிஸ்டான்ட் காஷியரும்,
இந்நூலைப் பதிப்பித்தவரும்,
இவ்வாசிரியர் மாணாக்கரும்,
சிவநேச ரூழியரும்
ம-ா-ா-ஸ்ரீ
பல்லாவரம்
வீராசாமி முதலியார் அவர்கள்
குமாரருமாகிய
ஸ்ரீ சுந்தரமுதலியா ரவர்கள் மீது
ஆரணி அண்ணாமலை முதலியா ரவர்கள்
அன்பின் முதிர்ச்சியால்
இயற்றியது.

வாழ்த்து.

நிலமண்டில வாசிரியப்பா.

பொன்னுல கோரும் புகழ்தரும் பதியின்
மின்னு மதிதவழ் விளங்குபூம் பொழில்வாய்

அஞ்சிறை யளிசூழ்ந் தரும்பு கிழிதர
வெஞ்சிறு மடற்கண் வீழ்ந்திடு மமுதமும்

இக்கொடு கனிக ளுகுத்திடு நறவமுந்
திக்கொடு திக்கினிற் றேனதி யிஃதெனுஅப்

பணிலநித் திலஞ்சேர் பங்கய மணித்தா
யனம்பெடை தழீஇயஞ் சிறகரா நீவிப்

புலவி தீர்க்கச் சிலகுரு குழீஇ
நிலைமயக் குறவால் வளையடை காக்கும்

பணையிற் புகவப் பயிர்மே னேக்கி
யிணைவின் னிலையென விறுமாந் திருநிலத்
தேநோக் கொப்பச் செந்நெல் வளனும்
நான வளைபா னலந்தரு வளனும்
நீர்வள னிலவள னெல்வள னெருங்கே
சீர்வள னுந்தருஞ் செங்கற் பட்டெனும்
பதியைச் சார்ந்த பல்லா வரத்திற்
றுதிதருஞ் சீர்த்தி தோய்ந்தவல் லானன்
குலத்தவ னுஞ்செங் குந்தர் மரபினன்
இலத்துற வோர்தம் முளத்துற வோர்பதந்
தன்முடி தாங்கித் தரிக்குங் குணத்தவன்
அன்னவ ரடியார்க் கடியனுந் தொண்டன்
வீராசாமி வேண் மேனு ளிழைத்த
சீரார் தவந்தருஞ் செல்வப் புதல்வன்
சுந்தரன் பரமன் றூய்நறு மலர்ப்பதஞ்
சிந்தையின் மறவாச் சீர்த்தியை யுடையோன்
சிவகிரி முருகன் றிருப்பதம் வழுத்துந்
தவமிகுஞ் சுகுணன் றன்புல னெறுக்கும்
புலமையின் மிகுத்த புண்ணியன் பொற்பார்
புலவர்கள் போற்றும் புலவரிற் புலவன்
நறவநிறைந்த நாண்மல ரெவ ணெனு
விளையார் பொழிமெரும் வருமளி மானச்
சிவப்பே ருூர்ந்த செல்வராக் காணிலென்
றவப்பே றிருந்துழித் தன்னிலம் புக்கிச்
செயத்தகு முறைவழாத் திருப்பணி யடிகள்
வியப்புற வியற்றி வித்தகப் பனுவலின்

ஐயந்தீர வருட்செய வவ்வழி
யுய்யு மூத்தம னொளிவளர் ஞானத்
தேசிகன் சேவடி சென்னியி லணிவான்
பூசனை புரியும் புனிதனிவ் வள்ளல்
திருப்போ ரூர்வளர் தேவன் பதத்தில்
விருப்போ டளிக்குமித் திருப்பதி கந்தனைத்
தானேயச் சியற்றித் தந்தன னெவர்க்கும்
வானோர் துதிக்கும் வள்ளல் சுந்தரனும்
தேனூர் மங்கையுஞ் செல்வருங் கிளையும்
நீணாட் புவியினி னிதிக்கோ னிகரென
வாழி வாழி யுமாபதி யருளால்
தாழ்வி லாயுளுந் தழைத்தோங்கி வாழியே.

வாழ்த்து முற்றிற்று.

உ

முருகன்றுணை.

சிறப்புப்பாயிரம்.

இஃது
கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை யாதீன மகாவித்துவான்
திரிசிரபுரம்
ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்
மாணாக்கரும்
சென்னைக் கவர்ன்மெண்டு நார்மல் பாடசாலைத்
தமிழ்த் தலைமைப் புலவருமாகிய
ம-௱-௱-ஸ்ரீ
சோடச அவதானம்
தி. க. சுப்பராயசெட்டியார் அவர்கள்
இயற்றியது.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

மன்னுபெரு வளஞ்சுரக்கு மலர்ப்பணைசூழ் சமரபுரி
வடிவே லேந்தும்
தன்னனைய பெருந்தகைதன் றிருவடிக்கீழ்த் தண்டமிழ்ப்பா
மாலை வேய்ந்து
துன்னுநெடு நீர்வைப்பிற் புகழ்பூண்டா னிராமலிங்க
தூய னின்ற
நன்னயஞ்சே ரியற்புலமை நாடும் அண்ணா மலையெனுநா
வலவன் றானே.

இதுவுமது.

இருப்போரூர் பேருமிலா னெறிகடலசூழ் நிலவரைப்பி
னியங் குயிர்க்காத்
திருப்போரூ ரமர்ந்தருளுஞ் செவ்வேண்மேற் பதிகமெனுந்
தெரியல் வேய்ந்தான்
சுருப்போரூர் தருகமலத் தடம்புடைசூ ழாரணிவாழ்
சுகுண தீபன்
விருப்போரூர் புகழ்பெறும் அண்ணாமலையாம் நாவலவன்
வியந்து தானே.

2400

இஃது
சென்னை-புரசை மகாவித்துவான்
ம-ா-ா-ஸ்ரீ
அஷ்டாவதானம் சபாபதிமுதலியா ரவர்கள்
மாணாக்கரும்
சென்னை கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்த் தலைமைப் புலவருமாகிய
ம-ா-ா-ஸ்ரீ
திரு-சின்னசாமிப்பிள்ளை யவர்கள்
இயற்றியது.

விருத்தம்.

சீரோங்கு கங்கைகுலஞ் செழித்தோங்க வருசெம்மல்
நீரோங்கு தடம்பணைசூ ழாரணியா நெடும்பதியான்
ஏரோங்கு மேழிப்ப தாகையா னிருங் குவளைத்
தாரோங்கு மிராமலிங்க மால்தவத்தின் வருதநயன் (1)

அண்ணா மலைப்புலவ னரியவியற் றமிழ்வலவன்
நண்ணார் தமக்குநல மேபுரியு நல்விரதன்
உண்ணா முலைப்பாக முற்றுறைவார் பூங்கழற்கே
தண்ணார் மலர்தூ யருச்சிக்குந் தன்மையினான் (2)

அரனடியார் தம்மைநித மரனெனவன் பொடுபோற்றி
வரநனியன் னாருளே வாய்ந்திடுசற் குணசீலன்
பரவுபுகழ்ச் சைவமெனும் பைங்கூழைப் பாரின்மிசைத்
தரமுடனே செழித்தோங்கத் தனிவளர்க்கு மோருழவன் (3)

மணிமாட மாளிகைக ணிடிரங்கோன் வண்பதியில்
நணிவாழு மன்பர்க்கு நன்கருள்வான் றிருவுளங்கொண்
டணியாரு மின்னருளோ டமர்ந்துறையு மைங்கரனுங்
கணியாருஞ் சித்திவிநா யகரிணைப்பூங் கழலிணைக்கே (4)

பாமாலை நயம்பெறவே பரிந்தளித்துத் திருப்போரூர்க்
கோமானார் முருகவேள் குரைகழற்குங் கவிமாலை

நாமாண்பார்ந் திடவியற்றி நன்கணிந்தா னவன்பெருமை
தாமாரித் தாரணியிற் சாற்றுதரம் வாய்ந்தவரோ (5)

சிவனருளே சிந்திக்குஞ் சிந்தையா னெப்பொழுதும்
அவன்புகழே துதித்தேத்து மருநாவா னனுதினமும்
உவமையிலா வவன்கழலே யுறுமலரா லருச்சிக்குந்
தவமுடையான் றவமுடையா ரவன்றன்னைச் சார்பவரோ (6)

கொங்கலரும் பைந்தார்க் குமாரசா மிக்குரிசில்
துங்கமிகுந் திடுசீர்த்தி தோய்ந்தவுமா பதித்தோன்றல்
தங்குபுகழ் மால்சுந் தரன்முதலாந் தக்கோர்கள்
இங்கிதமோ டன்னவையச் சியற்றியீந் தாரொவர்க்கும். (7)

இஃது
இரங்கோன் கர்ரென்சி யாபீசில்
டிரஷரரும்
இங்கிலாந்தில் மிகவும் பிரபலம்பெற்ற ஷேக்ஸ்பியர் முதலான
சிறந்த வித்வான்களெழுதிய சிம்பெலயின் முதலிய
அனேக வினியகதைகளை
ஐரோப்பியர் நாடகப்பான்மையாக
இராஜேந்திர விலாசம், சுபுத்திரைவிலாசம், சுதர்மராஜன் விலாசமுதலிய
வனேக விலாசங்களுடன்
அரிச்சந்திர விலாசத்தையு மியற்றிய
ம-ா-ா-ஸ்ரீ தி. ம. பொன்னுசாமிப்பிள்ளை யவர்கள்
இயற்றியது.

நிலமண்டில வாசிரியப்பா.

மலர்மலி வாவி வண்டடர் சோலை
நிலவொளி வீசும் நீண்மணி மாடம்
மாலோ டமரர் வருந்திக் கடைந்து
ஆல மகற்றிய வமுதத் தனையப்
பாரோர் களிக்கப் பானதி யிஃதென
வாரண முரைக்கு மாரணி யதனில்

அரக்கர் குலமற வறுத்தவன் சேதுவிற்
கரத்தா லமைத்தவக் காரணப் பொருள்வளர்
நாமந் தரித்தவ னற்றவப் பயனோர்
காமனை மானுங் காளையாம் அண்ணு
மலையெனத் தோன்றி மயிலவன் பதத்திற்
பலமணி யிரவிற் பகலவ னொளியைக்
கூசிடக் கண்கள் கோபுரஞ் சொலிக்கும்
மாசி லிரங்கோன் வளங்கிளர்ப் பதியிற்
கலைவல ரியாவருங் கரக்கம்பஞ் செயப்
புலவனாம் புலனும் பூரித்துருகத்
திருந்தவை தன்னிற் றேம்படு பதிகம்
பொருந்த வுரைத்தனன் புனிதனல் லுருவாய்
வந்தன னிவனொன் றுவந்து பாவலர்
கந்தனடி யருட் காணு நிகரொனச்
சகத்தோர் புகழத் தகும்பரி சிவர்க்குப்
பகர்ந்தா ரியற்றமிழ்ப் பாவலன் றானே.

இஃது
இரங்கோன் கன்ட்ரோலர் ஆபீஸ் கிளர்க்
ம-ள-ள-ஸ்ரீ
திரிசிரபுரம் முத்துகிருஷ்ணபிள்ளை யவர்கள்
இயற்றியது.

வண்ண விருத்தம்.

தாரணி காமற் செறிந்த காரணி
சாரணி மாட மலர்ந்து நீரணி
தாரணி மெச்சிச் சிறந்த வாரணித்
தமிழ் நாட்டில்

சங்கத வண்மைச் சால்புறு கங்கை
யங்குல மகிபனி ராம லிங்கந்
தங்குல மிக்கத் தழைத் தியங்கப்
பிறந்தோனாய்

சீரக மன்னந் தேடு மதீதன்
பூத மைந்தாகிப் புணர்ந்தனு வாதி
தீதரு மண்ணு மலையென வோதப்
பெயர்பூண்டு

திருமக னுக்குச் சிறந்ததாய் வரு
மருமக ளன்புற் றளித்த பேரருட்
டெரு ளுடைக் கவிவாண னுயிரு
நிலம்போற்றும்

ஆரண மாதிக் கலைகளை யோதிச்
சோதி நின்மல துரியா தீதவ
நாதி வத்துவை யாயு மாதவ
வனுபோகன்

அளிமது வுண்டு பாடச் செவ்வழி
கிளிகுயின் மயிலனங் கூடிக் கெக்கலித்
தளிதரும் பண்ணை சூழு மாவளத்
திருப்போரூர்

ஏறூர் பித்தர்க் கிசைந்த பாரதி
வாரி யணைத்துக் களிக்க மயூர
மேறி யடியார்க் களித்திடு மாறு
முகன்பாதத்

தியற்றிய பதிகத் திலங்கு மொண்மையை
நயன்று முத்தமிழ் நீந்திய புலமைய
ரியற்றமிழ் வித்து வானென நற்பெய
ரளித்தாரே.

இஃது
இரங்கோன் பெங்கால் பாங்கியில்
அசிஸ்டான் டிரஷரரும்
இந்நூலாசிரியர் மாணுக்கருமாகிய
ம-ா-ா-ஸ்ரீ
ப. வீ. சுந்தரமுதலியாரவர்கள்
இயற்றியது.

நிலமண்டில வாசிரியப்பா.

கடல்விளிம் புடுத்த கண்ணக னிலத்துப்
படரொளி பரப்பும் பரிதி யன்ன

பல்வளங் கெழீஇய பதியெனுஞ் சென்னை
தொல்கலைக் கவிஞர் சூழ்தரு நன்னகர்

அதன் மாகாண மரும்பதி யிஃதெனு
முதுமறை யோரான் மொழிதற் கரிதாந்

தெண்ணீர்த் ததும்பித் திரைசெறிந் திரைக்கு
முந்நீ ரருவிபோன் முத்தங் கொழிக்குப்

நற்புன லிருந்தட நணியோதிம நடைக்
கற்புறு மங்கையர் கடிநீர் குடைவர்

நாண்மலர் முறுக்கவிழ் நறவமாந்திச்
சேணுய ரஞ்சிறைத் தேனளி முறலும்

பணிலமித் திலஞ்சேர் பங்கயப் பொதும்ப
ரணிதரும் பெடையுடன் களியன முலவும்

மாவளர் கோகில மழலை பார்ப்புடன்
கூவிளக் குடம்பையுட் குலவிகண் வளரும்

மதிதவழ் மாடமு மன்னு கோபுரமும்
விதியிது முறையெனு வேய்ந்த பான்மையாற்

சீர்மிகுந் தோங்குஞ் சிகரங் கடக்கொணு
நீர்மைய தாகியங் கோர்சக டத்தவன்

தன்னிலே மயங்கிப் பொன்னகர் பொருவிலென்
றுன்னி விண்ணுரீஇ யங்கிலே யேகுவன்

இன்ன தன்மையத்த வெழிற்பதி யாரணி
தன்னின் மேவித் தராதலந் துதிக்குஞ்

சைவமெய்த் திருவே சார்பெனக் கொண்டோன்
மையில் புகழ்வளர் வானதி குலத்தோன்

வள்ளல் சுந்தரன் மாமது ரோசனே
யுள்ளத் திருத்தி யுசிதபொற் பதத்தைப்

பராவி வழுத்தும் பான்மையை யுடையோ
னிராம லிங்கமா விழைத்த தவந்தருந்

தன்மகப் பேற்றிற் றரளமென் றுதித்தோன்
நன்னூன் முன்னு னலங்கிளர்ப் பன்னூல்

காரிகை தொல்காப் பியங்கல் லாடம்
வீரசோ ழியமும் விளங்க வுணர்ந்தோன்

திரு விளேயாடல் பெரிய புராணமு
மரிதரி தென்று வுனைபகர் வலவன்

பதிபசு பாசப் பயனிசைப் பனுவ
லிதிகாசத்தி னிருங்கடை கடந்தோன்

இத்தகை நூற்க ளனைத்தினு மேற்குந்
தத்துவந் தன்னே முற்றிலு முணர்ந்தோன்

கருப்பை யொழிக்க விருப்போ ரூர்துதி
திருப்போ ரூரன் சேவலங் கொடியோன்

சுரர்கோன் மகளெனச் சொற்றெய் வயானே
மருவு மணுளன் வள்ளியின் கேள்வன்

தன்புதத் தமுதார் தமிழ்ப்பதி கந்தனே
யின்ப மார்ந்த விலக்கிய விலக்கணத்

தூய்நூ றிரித்தே சொற்றன னவையி
லாய்புக ழறிஞ ரருங்கவிப் புலவர்

இயற்றமிழ் வித்துவா னெனும்பெய ரீந்தனர்
செயத்தகு மிவனெனச் சீர்சால் புலவரும்

விண்ணு டவரும் வியப்புறுஞ் சுகுணன்
அண்ணா மலையெனு மஞ்சொ னுவலனே.

இஃது
சென்னைத் திருமயிலை இலக்கணவித்துவான்
ம-ள-ள-ஸ்ரீ
சண்முகம்பிள்ளையவர்கள்
இயற்றியது.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

அக்கடுவன் றயின்றவனுக் கோமொழிவைத் தருள்போரி
யமலன் வெய்ய
கொக்கடுவேற் கரன்றனக்குப் பாங்கினொரு தமிழ்ப்பதிகங்
குயிற்றிட் டானல்
மைக்கடுவன் மலர்க்குழல்கண் முலைமாத ராட்டயரும்
வண் பொழில்வாய்
அக்கடுவன் மாங்கனிமந் திக்குதவா ரணியண்ணா
மலைமா லம்மா.

இதுவுமது.

பார்பூத்த வுமைநல்கு மெஃகவேல் பூத்தகரப்
பனவ னெங்கோன்
வார்பூத்த தனக்குறிச்சி தனைக்களவிற் புணர்போரி
வயங்குங் கந்தன்

ருர்பூத்த பன்னிருதோட் பிறங்கலணி பெறத்தமிழி
லலங்கல் வேய்ந்தே
நார்பூத்த புகழ்பெற்று னியற்றமிழண் ணுமலைநா
வலவன் றனே.

இஃது
இயற்றமிழாசிரியர்
ம-ா-ா-ஸ்ரீ அஷ்டாவதானம் வீராசாமி செட்டியாரவர்கள்
மருகராகிய சென்னை-சூளை வித்துவான்
ம-ா-ா-ஸ்ரீ அப்பன் செட்டியா ரவர்கள்
இயற்றியது.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

மணக்கடம்பு புனைபோரி முருகனடி மலரிணைக்கே மனத்திருடி
வணப்பாலி நதிவயங்கு மாரணிவாழ் கங்கைகுல வள்ளனேயக்
குணக்குன்றண் ணுமலைசெந் தமிழினெரு பாமாலை குயிற்றலாலிப்
பணப்புவனி தனின்யாரோ கரக்கம்பஞ் சிரக்கம்பம் பண்ணுதாரோ.

இஃது
சென்னை ஹைகோர்ட்டு
ம-ா-ா-ஸ்ரீ மதுரகவி
செல்வ-தேவராஜம்பிள்ளை B. A.
அவர்களியற்றியது.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

சீரணிநா வலர்வியப்பச் சிவனடியார் தவமிழைப்பத்
திகழும் போரூர்
பேரணிமா தலத்துறையு மிறைவன்முரு கக்கடவுள்
பேரி லோர்ந்தே
ஓரணியார் பதிகமுறைத் தியற்றமிழ்வித் துவனெனும்பே
ருயார்வாய்ப் பூண்டான்
ஆரணி ராமலிங்கனருந் புதல்வனண்ணு மலைப்புனித
னவனி மீதே.

இஃது
சொர்க்கபுராதீனம்
ஸ்ரீமான் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்
மாணுக்கரு ளொருவரும், சென்னை "வெற்றிக்கொடியோன்" எடிற்றரும்,
ஸெண்ட் மேரிஸ் காலேஜ் தமிழ்த் தலைமைப் புலவரும்,
புதுவை ம-ா-ா-ஸ்ரீ
தம்புசாமி முதலியா ரவர்கள் குமாரருமாகிய
ம-ா-ா-ஸ்ரீ செய்யப்பமுதலியார் அவர்கள்
இயற்றியது.

நேரிசை வெண்பா.

தெள்ளமிர்தே தேனே தெவிட்டாத முப்பாகே
உள்ளபடி யிப்பதிகத் தோடொப்போ—வுள்ளன்போ
டாரணியண் ணுமலைசொல் லற்புத வலங்காரச்
சீரணி யென்பா நன்கு தேர்ந்து.

இஃது
சென்னை-இராயபுரம் வித்துவான்
ம-ா-ா-ஸ்ரீ
வே. கி. நாராயணசாமிப்பிள்ளை அவர்கள்
இயற்றியது.

நேரிசை வெண்பா.

சீரமைந்த ஆரணிவாழ் செல்வ னிராமலிங்க
மாரனெனும் அண்ணு மலைப்புலவன்—வீர
இயற்றமிழ் வித்வா னெழின்முருகன் மீது
இயற்றிஞ னேர்பதிக மின்பு.

தண்ணருள்செய் ராமலிங்கத் தக்கோ னருந்தவஞ்சால்
அண்ணு மலைப்புலவ னுயுமியற்—றண்டமிழால்
வள்ளிதெய்வ யானை மகிழ்முருகன் மேற்பதிகந்
தெள்ளிசையாற் சொன்னுன் சிறந்து.

இஃது
ம-ா-ா-ஸ்ரீ மஹாவித்துவான்
பென்னலூர் நாராயணசாமிநாயுடு அவர்கள்
குமாரர் ம-ா-ா-ஸ்ரீ வித்துவான்
நாதமுனிநாயுடு அவர்கள்
இயற்றியது.

பன்னிருசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

மதகுவழி யொழுகுநீ ரொடுமருவி வண்சோலை
மதுசாலி வளரச்செயும்
வளமலியு மாரணி யிராமலிங் கன்சுதன்
மன்னியற் றமிழறிந்த
மதியிலுய ரண்ணு மலைப்பெயர்கொள் புலவர்கோன்
மதியிரவி மண்டலத்தை
வருகும் பதாகையணி மாளிகை நிறைந்தொளிசெய்
மறுகுதோ றுங்கரியுடன்
ததைமணித் தேரூர் தருந்திருப்போரூர்த்
தனிக்குமர னகமகிழ்வுறச்
சாற்றுமீ ரைங்குற்ற மின்றியழ கொருபதுந்
தயங்கவுரை பதிகமதனைக்
கதலியிர சாலமா சினிசினி கற்கண்டு
கன்னல் கமலாதிராக்ஷை
கபிலைபா னெய்யெனக் கழறுவதெ னமரருண்
கலசத்தினும் மதுரமே.

விருத்தம்.

ஆரணி யிராமலிங் கன்சுதனியற்றமி
ழரும்புலவன் அண்ணுமலை
ஆரணி யரன்குமர னும்போரி மேவிவள
ரறுமுகவ னருள்வாய்த்திட
ஆரணி செறிந்தபதி கம்புனைந் தானிதனை
யனையவொரு நாலுலகினில்
ஆரணி செய்தார்செய்த னர்களென்னு மவர்களித
னருமையறி யாதபேரோ.

இஃது
சென்னை ம-ா-ா-ஸ்ரீ
சுப்பராயநாயகரவர்கள்
இயற்றியது.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

ஆரணிசெஞ் சடைப்பரனுக் கருமறையன் றருள்போரி
யமலர்க் கிஞ்ஞான்
றூரணிவா ழுமைகரநன் னதிக்குலத்தோ னெம்மண்ணு
மலைப்பேர் வள்ளல்
தாரணியி லிருமைநல மெய்திடற்கின் டியற்றமிழிற்
றகைமை சால்சொற்
றூரணியக் கண்டாமற் றவனென்று நீடூழி
தழைக்க மாதோ.

இஃது
சென்னை சூளை ம-ா-ா-ஸ்ரீ
வா. தங்கவேலுப்பிள்ளை யவர்கள்
இயற்றியது.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

சீரணியு மணிமதிற்சூழ் திருப்போரூர்ப் பன்னிருகைத்
தேவின் மீது
தாரணியிற் றமிழ்மாலை சூடியியற் றமிழ்வித்வா
னென்றே யோர்நற்
பேரணிந்தான் ஹானரோரி மாஜிஸ்டி ரேட்மதுராப்
பிரபுவா லீங்கின்
றூரணியன் ணுமலைப்பே ரருங்கவிஞ னீடூழி
வாழி மாதோ.

இஃது
இராமநாதபுரஞ் சேதுபதி சமஸ்தான வித்வான்களிற் சிறந்த
சோடச அவதானம் சரவணப்பெருமாள் கவிராயரவர்கள் பவுத்திரரும்,
உபயசோடச அவதானம ம-ா-ா-ஸ்ரீ அருணசலக் கவிராயரவர்கள்
புத்திரருமாகிய துவாத்திரிம் சதாவதானம் ம-ா-ா-ஸ்ரீ
சரவணப்பெருமாள் கவிராயரவர்கள் கனிஷ்டர் ம-ா-ா-ஸ்ரீ

இராமசாமிக் கவிராய ரவர்களியற்றியது.

ஆசிரிய விருத்தம்.

சீர்கொண்ட தண்டலை மலர்த்தேன் றிரண்டுநற்
செங்கெல்கன் னலைவளர்த்துச்
செழித்துவளர் போரூர் தழைத்த முருகக்கடவுள்
சீரடி பணிந்துபோற்றி
ஏர்கொண்ட வாரணி யிராமலிங் கேந்திர
னியற்றிய தவத்துதித்தோன்
இயற்றமிழ்ப் புலவனென் றேற்றும் அண்ணமலை
யியற்றுபதி கத்தையிந்நாள்
தார்கொண்ட குவளையணி மார்பினன் பொதிகைத்
தமிழ்க்கும்ப னெனவந்தவன்
சந்ததி தழைக்கவரு ளெந்தைகந் தன்பதந்
தன்முடிக் கணிசுந்தரன்
பார்கொண்ட புலவரகமகிழவே யச்சிற்
பதிப்பித் தெவர்க்குமீய்ந்தே
பாசத் தொடக்கறுத் தானென்று புவியிற்
பகர்ந்திடுவ ரொவருமாதோ.

இதுவுமது.

ஆலை வடித்த சாறோடி யாற்றுப் பெருக்கா வானற்றை
யடைத்து வளர்ந்த பூகமட லடவி தடவிக் கனியுதிர்க்குஞ்
சோலை சூழுந் திருப்போரூர் துலங்கு முருகக் கடவுடனைத்
துதிசெய் தண்ண மலைக்கவிஞன் சொல்லும் பதிகத் தமிழையன்றிப்
பாலைத் தேனைச் சருக்கரைபோற் பகரு மிறைய னர்நூலைப்
பருகாள் கமலை யமுதாவிப் பாவே முன்னுண் டானற்பா
மாலைப் பொருளின் சுவையறிய வான்மீ கருந்தென் மலைமுனியு
மலைத்தா லியற்ற மிழ்ப்புலவன் வன்மை யுணர்வா ரொவர்மாதோ.

உ

வேலுமயிலுந்துணை.



திருப்போரூர்

முருகக்கடவுள் பதிகம்.

காப்பு.

வெண்பா.

சீரார் சிவஞானச் செல்வ னறுமுகவன்
ஏரார் திருப்போரூ ரெம்மிறைவன்—ரூராரும்
பூம்பதமேன் மாலை புனைய வெனக்கருள்செய்
வேம்படி விநாயகன்றாள் வேண்டு.

உ

முருகன்றுணை.

பதிகம்.

ஆசிரியவிருத்தம்

அருள்சுரக்கு மறுமுகமு மீராறு வரைப்புயமு
மணியன் மார்புந்
தெருள்சுரக்குஞ் சிற்றிடைய ரிருமருங்குந் திகழ்வனப்புஞ்
சீர்சால் போதப்
பொருள்சுரக்கும் பொற்றுளா போரூர்வாழ் மெய்ஞ்ஞானப்
பொருளே பொல்லா
விருள்சுரக்கும் பவத்தொடக்கைத் துடைத்தருளத்தெரித்தருளா
யெம்பிரானே (க)

எம்பிரான் போரூரி லினிதமர்ந்தோ யெனையாளு
மிறைநீ யல்லால்
அம்புவி லெவர்புரப்ப ரடியேனை யாளுடைநீ
யாளொ ணாதோ
அம்பிகையார் கரத்தில்வள ராரமுதே யருள்விருந்தே
யண்ணு வேழை
நம்பிவந்தே னெனையாளத் தடையென்னே நாயேற்கு
நவிலுவாயே (உ)

ஆயேநல் லருள்வடிவே யருள்சுரக்குங் கற்பகமே
யமரர் வாழ்வே
நீயேயிங் கெளிதருளும் பெருங்கருணு நிதியெனநின்
றிருத்தாள் போற்றிச்
சேயேனிங் குனையடைந்தேன் றிருப்போரூர்ச் சிவஞானச்
செல்வ மேயிந்
நாயேனுக் கித்தநியின் மாமோன நிலையிதென
நல்குவாயே (ந)

நல்கியெனக் கருள்செயருட் பெருங்கடலே நின்பாத
நயந்தோர்க் கெந்தாய்
தொல்வினையு மினியுளவோ தூயதிருப் போரூர்வாழ்
துரையே மோன
மல்குமறை வான்பொருளே வளர்ஞான தபோதனர்கள்
வாழ்வே யென்றும்
அல்கலில்சீ ரானந்த வாரிதியே குணநிதியே
யரும்பொற் றாளா (௪)

போற்றுளென் முடியிருத்தப் போற்றுகின்றேன் புண்ணியனே
புலன விக்கக்
கற்றார்தம் மகத்துறையுங் கண்மணியே மணிவிளக்கே
கந்தா வென்னைப்
பெற்றானே சேய்வருந்தப் பிறவாத வரந்தரவிப்
பேதை யேற்குச்
சற்றேனுங் கடைக்கணியாய் சண்முகனே போரூர்மெய்ச்
சமயத் தோனே (ரு)

சமயமதிற் சிவசமயந் தழைக்கவருள் சீகாழித்
தலத்தே யங்நா
ளுமையவளம் பிகைகொளரி யமுதருத்து மொருதனியே
யொப்பி லன்பர்
தமைவணங்குந் தவத்தவர்செய் தவப்பேறே திருப்போரூர்த்
தம்பிரானே
இமையளவு நின்றாளிவ் வேழைமுடிக் கினிதிருத்தி
னிழுக்க தாமோ (சா)

இழுக்கெனநின் கரம்விடநற் றுணையெவர்கா ணெவண்புகுவே
னேங்கி யேங்கி
வழுத்தவகை யறியாதே னனலின்மெழு கெனக்கசிந்தே
வணங்கா நிற்பேன்
பழுத்தமனத் தடியர்தொழும் பத்திநெறி சிறிதறியேன்
பாவியேனும்
விழுத்தலமாந் திருப்போரூர் வித்தகநின் பதமடைந்தேன்
வினையுமுண்டோ (எ)

வினைப்போகப் பிறப்புமிலை யிறப்புமிலை நமனில்லை
விமலா நின்றாள்
தினைப்போதிற் சிந்தனைசெய் யடியவர்க்கே நின்னருட்சீர்த்
திறமீ தென்றால்
உனைப்பாடிப் பாமாலை பொன்னடிசூட் டெனக்கரிய
துலகி லுண்டோ
சினைத்தூறுந் தேம்பொழில்சூழ் போரூர்வாழ் சிவக்கொழுந்தே
தேவர் வாழ்வே (அ)

வாழ்வுதரு மாமறையே மறைமுடிவே வானவர்கோன்
வணங்குந் தாளா
தாழ்முடியுன் னடிப்பொருந்தத் தருணமென வந்தடைந்தேன்
சாமி நாதா
ஆழ்துயரந் துடைத்தருள்செய் யருமருந்தே போரூர்வா
ழமுதே யாக்கை
வீழ்ததியில் வேன்மயிலுந் துணையென்றே நாயேனை
விளம்பச் செய்யே (கூ)

செய்யபுல னைந்தடங்கிப் பொறியடங்கித் திருத்தாளிற்
சேரு முன்னம்
ஐயவடி வேற்குகனே வள்ளிதெய்வ யானையுட
னருகில் வந்தே
உய்வகைநின் றரிசனமு மெனக்குதவ வேண்டுமென்றிங்
குனை யடைந்தேன்
மெய்யுணரு முனிவர்தொழும் போரூர்வாழ் முருகவிரைந்
தருளு வாயே (ய)

வாழி மானருள் வள்ளிதெய் வானையும்
வாழி வேனன் மரகத மாமயில்
வாழி போரூர் வரும்விசா கன்பதம்
வாழி யெந்தை யடித்தொண்டர் வாழியே.

திருப்போரூர் முருகக்கடவுள்
பதிகம்

முற்றிற்று.